உ

சிவமயம்



மீசாலை மேற்கைச் சேர்ந்தவரும்

உயர்சைவ வேளாண்குடியாளருமான

உயர்திரு.

## கா. சின்னையாபிள்ளை

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவுக் கலசம்

05-02-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த

உயர் சைவ வேளாண்குடியாளர்

# உயர்திரு கார்த்திகேசு சின்னையாபிள்ளை

(இளைப்பாறிய வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலைப் பரிசோதகர்)

**அவர்களின்**

சிவபதப்பேறு குறித்த

# நினைவுக் கலசம்

05-02-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழுருவே யுந்தன்
# பொன்னடியில்
# அர்ப்பணித்தோம்

பொன்னே புகழுருவே
பொற்றமிழாள் புத்திரனே
தன்னே ரற்றபெருந்
தவப்பயனே —
**சின்னையா** —
**பிள்ளை** யென்றே யுயர்ந்திட்ட
பேரருளே பெருந்தகையே
உன்னையும் இழந்தோமே நாம்!
நெஞ்சந் துதித்து
நினைவுப் பாமாலை கட்டி
வஞ்சமறு பணிசெய்த
வாரணமே யுந்தனது
பணியுவந்து பாராட்டிப்
பாதமலர் அர்ப்பணித்து
அணிதிரண்டு அஞ்சலித்தோம்
ஆருயிரே அமைதி கொள்க ......

மீசாலை மேற்கு,
**மீசாலை.**

**— அன்பு மனைவி**
**பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கார்த்திகேசு சின்னையாபிள்ளை
## அவர்கள்



**மண் மகிழ 17-02-1937 கண் நெகிழ 06-01-1998**

### திதி நிர்ணயம்

போற்றலுறு மீசுவரம் புகழ்தையாம் ஆறாம்நாள்
ஏற்றமுறு பூர்வபக்க அட்டமியாம்—வீற்றிருந்தே
விந்தைசெய்த வித்தகனாஞ் **சின்னையா பிள்ளை**யவன்
முந்தைவினைப் பயனடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கா. சின்னையாபிள்ளை

அவர்களின்

# வாழ்க்கைச் சுவடுகள்

பொன்னகர் எனப்பொலி வெய்திடு திருநகர்
      போற்றுறு யாழ்நகர் மீசாலைப்பதி
தன்னிக ரறுமீ சாலை மேற்கினில்
      தரமுயர் கார்த்தி கேசுவென் றுயர்வுறு
பன்னரு மருளோன் பான்மைக ளோங்கி
      பாவைபொன் னம்மா வென்று தையலை
நன்னலங் கொழித்திட நாநிலத் தணைந்து
      நல்லற மோங்குநல் லில்லறங் கண்டான்!

மேதகு நல்வழி யோங்கிடு மகிபன்
      மேன்மைக ளுறுமூ மைந்தரை யுவந்து
கோதறு மின்பங் குவித்தன னவருள்
      கோபுர மெனச்சின் னையா பிளிர்ந்தான்
பாதகு சின்னை யாபிள் ளையெனப்
      பகலவன் பெயர்கொண் டெழுந்தன னோங்கி
ஈதலு மினியநற் குணங்களு மமைந்த
      இளையவன் கதிரவ னெனவொளி கொண்டான்!

இரசா யனத்தொழிற் சாலை பரந்தனில்
      இயல்புறு பணிகள் ஆற்றுயர் தூயவன்
விரவிடு புகழ்செல்வ ராணியை மணந்து
      விந்தைகொள் ராகுலன், வதனா, சித்திரா
தரமுயர் மாலா, கார்த்திகா எனவரு
      தங்கங் களையிம் மண்ணுக்கீந்தவன்
உரமுறு வேலா யுதபிள் ளையவன்
      உவப்புறு சின்னை யாவின் சோதரன்.

எழிலுறு ஜேர்மனியில் குடும்பமா யமர்ந்து
      ஏற்றங் கொள்பவள் இனியநற் பைந்தொடி
களிப்புறு இரவீந் திரனெனும் இனியனைக்
      கைப்பிடித் தில்லறச் சோலையுட் புக்கவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிவளர் சிந்துஜா, சாருகா என்றிரு
ஓவியச் செல்வரின் ஓங்குறு தாயவள்
தெளிவுறு தீங்கனி சீர்தன லட்சுமி
சின்னை யாபிள் ளைபெறு சோதரி.

இருவராஞ் சோதரர் இனிமைகள் சேர்த்திட
இலங்குசின் னையா எழுச்சிகள் பெற்று
குறுகுறு நடந்து சிறுகை நீட்டிக்
குறும்புகள் பற்பல குணமுற வாற்றி
அருளொடு அன்பு ஆண்டவன் சேவை
அறமென நின்று கலைகள் பயின்று
பெருகிடு புகளொடு பேரறி வாளனாய்
பெற்றிகள் கொண்டே யுவர்ந்தனன் சிறந்து!

இந்து என்றே இலங்கிடு சாலை
இனியகல் லூரியிற் கலைகள் பயின்று
முந்து புகழ்பல கல்வியிற் கொண்டு
முகிழ்த்தே விளையாட் டுத்துறை சிறந்தும்
விந்தைகொள் இலங்கைப் போக்கு வரத்துச்
சபைதனி லிணைந்து நடத்துன ராகி
சந்ததந் தழைத்து சாலைப்பரி சோதகர்
சார்புகழ் பதவியும் பெற்றுச் சிறந்தான்.

மட்டக் களப்பொடு நரேன் பிட்டியா
மாசறு யாழ்;கிளி நொச்சி பருத்தித்துறை
எட்டிடா எழில்கொள் சாலைகள் தன்னில்
ஏந்தல் பணிசெய் துயய்ந்தனன் மலர்ந்து
கட்டழ கன்னெனக் காசினி புகழ்ந்திடு
காளைசின் னையா பிள்ளை யுவந்து
இட்ட முடனல் லெழிலவள் தங்க
மணிதனை யணைந்தே யினிமைகள் கண்டனன்.

அன்னம் மாவெனும் அணங்கினை மணந்து
அகிலத் துயர்ந்திடு காசித் தம்பியின்
தன்னல மற்றநல் லறங்களாற் தழைத்த
தங்க மணியைத்தன் இல்லவ ளாக்கியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னை யாபிள் ளையெனுஞ் சிங்கம்
கீர்த்திகள் பெற்றனன் பாரினி லுயர்ந்து
உன்னருந் தவங்கள் உவப்புட னாற்றி
உருக்கிடு தெய்வ சிந்தையோ டெழுந்தான்.

வெள்ளை மாவடி விநாயகன் கச்சாய்
வியன்பதிக் கண்ணகை அம்பாள் சந்நிதி
உள்ளம் உருக்குநற் கரும்பிமா வடியாம்
உயர்வுறு முருகன் ஆலயம் என்றே
எள்ளரு தெய்வ பக்தியோ டணைந்து
ஏத்து பணிபல செய்தே யுவந்து
வள்ளல் சின்னை யாபிள் ளைமன
வாகொடு மூவர் மைந்தரை யீந்தார்.

பண்ணமர் ஜேர்மனிற் பணிகொள் பாங்கினன்
பரவிடு கீர்த்திப் பிரதா பன்னெழில்
வண்ணன் களுத்துறை ஆங்கில ஆசான்
அருநெறி பயிற்றுகல் லூரியிற் பயில்வோன்
திண்ணியன் பகீரதன், உயர்கலை மாணவன்
திருமிகு சசீதரன் எனவரு மைந்தர்
உண்மையி னொளியாய் உயர்சின் னையா
உவந்திட மகவாய் மலர்ந்தனர் பொலிந்தே!

பெற்ற தனயரின் பெருமைகள் காக்கவும்
பேசுறு கலைகள் பயிற்றி உயர்த்தவும்
உற்ற நற்பணி பலபல செய்து
உயர்வுகள் கண்டிட உழைப்பினை ஈந்து
கற்றவ ராக்கியே கவின்மைந் தர்களைக்
கண்ணெனக் காத்துக் கடமைகள் செய்து
நற்றவ மோங்கச் சின்னை யாபிள்ளை
நயந்தனன் மகிழ்ந்தனன் நன்மைக ளுற்றனன்.

இல்லத் தலைவியின் இனியநற் சார்பினால்
இதயம் மகிழுநல் லுறவுகள் வாய்த்தன
வல்லவர் மைத்துனர் சகலர் மருகர்
வாஞ்சை யுறுநற் பெறாமகர் என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோ ருறவுதன் னருகிலே சூழ்ந்தர
நயந்தனன் சின்னை யாபிள்ளை யுவந்து
வெல்லரு மனையவள் வழிவழி வாய்த்த
வெற்றிகொள் உறவுகள் ஈங்கினிச் சொல்லுவாம்.

விண்ணக மேவிய விருப்புறு பைங்கிளி
வேலுப் பிள்ளையின் இனியநன் னாயகி
கண்ணுறு லலிதா. கேமா, ரஞ்சிதா
கலையமர் புதல்வரின் கண்ணிகர் தாயவள்
மண்ணுயர் மனோன்மணி மனையவள் வழியினால்
மைத்துனி யாகினள் மலர்வுறு தொழிற்றிணைக்
கண்ணமர் கழகத் தெழுதுனர் ஆனவன்
கந்த சாமிநல் மைத்துன னாயினன்.

இலங்குமின் சார சபைதனிற பிரதம
எழுதுன ராகவே சிறந்தவன் குணமலர்
நலங்கொள் பாவையை யுவந்தே மழலைகள்
ஜெயக்குமார், துசி, லதா, தன்னையே ஈந்தவன்
பலமுறு பூபால பிள்ளையென் றோதிடும்
பண்பினன் மைத்துன னென்றே வாய்த்தனன்
நலம்புகழ் கனடா நாட்டில் வாழ்பவன்
தரமுயர் சுகாதா ரப்பரி சோதகர்.

தண்மதி தபோதினித் தையலை யுவந்தே
தகைசுமையர் மஞ்சுளா, ஆதித்தன், பார்த்திபன்
வண்ணமாம் மைந்தரை யீந்திடு வடிவேல்
வாகுடன் மைத்துனன் என்றே வாய்த்தனன்
பண்ணுறு கடற்படை தனிற்றொழில் கொண்ட
பண்பினன் சரவண முத்துவின் நாயகி
கண்ணுறு கலைநவில் ஆசிரியை செந்தில்
குமரனின் அன்னையள் இராச மணியும்

இறைபத மடைந்திடு தயா நேசனின்
இனியநா யகியென இலங்கியே குழந்தைகள்
நிறைவுறு கவிதா, கர்ணன், கஸ்தூரி
நிலையுயர் பெயரினர் தன்னையே ஈந்தவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைதரு யாழக மிலங்கிடு போதனா
வைத்திய சாலையில் பிரதம தாதியென்
றறைதரு முயர்பணி யாற்றிடு முத்தமி
நவில்நவ மணியும் மைத்துனி மார்களே!

இலண்டன் நகர்தனில் இலங்கிடு செம்மையள்
இனியவன் யேசு தாசனின் நாயகி
நலங்கொளு றெஜி, பிறின்ஸ், டேன் எனுமைந்தரை
நவையற வீன்றவன் நல்லெழில் முத்தினள்
தலம்புகழ் தவமணி தகுமதி யென்றிட
தாவுயர் மைத்துனி யெனநின் றுயர்ந்தனள்
பலமுறு சுற்றம் சொந்தமென் றேத்திடப்
பண்பினன் சின்னை யாபிள்ளை யுயர்ந்தான்.

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த செம்மல்
வல்வினையால் வாடியின்று விண்ணிற் போனான்
பையெனவே நடந்துவரும் பாழும் விதியாற்
பண்பாளன் பார்துறந்து பறந்தே போனான்
மையெழுதும் விழிசோர மனமுஞ் சோர
மனையரசி துடித்தலற மன்னன் போனான்
கையணைத்து வளர்த்தசெல்வர் கலக்கங் கொள்ளக்
கண்ணனையான் விதிமுடித்துக் கடவுள் ஆனான்.

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற் றெட்டு
அணிதிகழுந் தைமாதம் ஆறாந் தேதி
மேயினிய செவ்வாய்நாள் மெதுவாய்க் கங்குல்
விலகியகல் விடிகாலை நேரம் அஃது
தாயினியான் சின்னையா பிள்ளை நம்மைத்
தவித்தலற விட்டுநெடும் பயணம் போனான்
வாயினிக்க மனமினிக்க வழங்குஞ் செஞ்சொல்
வண்ணனவன் போய்விட்டான் போயே விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி மனக் கலக்கம்

## வேறு

சின்னையா பிள்ளையெனும் சீர்சான்ற தத்துவமே
என்னையா எங்குற்றாய் எமைமறந்தாய் — பொன்னிகர்த்த
பூவேயெம் பொக்கிஷமே புன்னகையா லெமைக்கவர்ந்தாய்
பாவெழுத வைத்தாயே ஏன் ... — ?

கொள்கைக்கு குன்றனையாய் கொடியஆத்மா நோயதனால்
கொள்ளியிட வைத்தின்று எங்குற்றாய் — வெள்ளைமன
மன்னவனே மனைமக்கள் மறுகிநின்று மனங்கலங்க
பொன்னவன்தா ளடைந்தாயோ ஓ .... ?

சிரித்தவுந்தன் முகமெங்கள் சிந்தனையைச் சாகடிக்கச்
சரித்தனனோ காலனாங் கொடியனையா? -- தரித்ததுயர்
ஆறாது கொள்ளிக் குடஞ்சுமந்து தீயிட்டு
மாறாத் துயர்கொண்டோம் நாம்.

மைந்தரது மங்கலத்துக் கெமையழைத்து விருந்திடுவாய்
வந்திடுவா யழைப்பாய் எனவிருந்தேன் — விந்தையனே
அந்தியேட் டிக்கிரியை அணிசிறக்கப் பாட்டெழுதி
நொந்தழத்தான் வைத்தாயே ஏன்?

இறுதியிலும் உன்முகத்தில் இரங்கிநின்று அஞ்சலிக்க
செறிந்தஇரு மைந்தரில்லை நானுந்தான் — அறிபுகழே
காலமிட்ட கட்டளைதான் கலங்கியென்ன கதறியென்ன
கோலமுறு தாள்பொலிக நீ.

## மனைவியின் மனத்துயர்

எங்குற்றா யினியவனே என்னைவிட்டு
இனியார் தானிவ்வுலகில் எமக்கிங்குண்டு
பொங்கிவரு கண்களொடு பூவையென்னைப்
பொட்டிழந்து பூவிழந்து துடிக்கச்செய்து
எங்குலத்து நாயகனே இனிமைச்செல்வா
ஏகாந்த வெளிநாடிச் சென்றதேனோ?
செங்கரும்பே சீர்திருவே செல்வக்குன்றே
சிரிப்பிழந்தேன் உன்பிரிவாற் சோகந்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைந்தரின் மனவெதும்பல்

அப்பாவுன் அன்புமுகம் மறைஞ்சு போச்சே!
ஆடிநின்ற தென்றல்மொழி ஓய்ஞ்சு போச்சே!
தப்பாத நல்வழிகள் தகைமைச் சொற்கள்
தந்தெம்மை நெறிநின்று தழைக்கவைத்த
இப்பாரின் எழிலூற்றே எங்கள் ஐயா
இருள்சூழ எம்வாழ்வில் எங்குற்றீரோ?
சொப்பனம்போல் இருக்குதையா உங்கள் சேதி
சொந்தமனை மக்கள்துயர் சொல்லப் போமே?

## உறவினர் - ஊரவர் உள்ளத்துயரம்

ஊர்நடுவே உயர்ந்தபழ மரமேயுந்தன்
உத்தமமாங் கருணைமுகம் மறக்கப் போமோ?
பேர்பெறுநற் சின்னையா பிள்ளைஐயா!
பெருமனமே பெருமுதவி பேணிச்செய்யும்
இப்பாரின் எழில்தருவே இமயக்குன்றே!
இனிமையொடு பொறுமைகொண்டு உயர்ந்தகோவே!
அப்பாலுக் கப்பால்நின் றணைக்குந் தெய்வம்
அடிபிணையில் வீற்றிருக்கச் சென்றிட்டாயோ .....?

## தேற்றம்

இரவுபடுக் கச்சென்றான் இருட்டுநீங்க
இனியகா லைப்பொழுதில் இருளைஈந்தான்
சிரத்தையொடு எமைப்புரந்து செம்மைஈந்த
சின்னையா பிள்ளையவன் இன்றைக்கில்லை
அரவணைத்த கைநெகிள அவலஞ்சூழ
ஐயகோ என்றலறி அன்பைஉன்னி
விரவியழ வேண்டாங்காண் விண்ணில்நிற்கும்
வித்தகனார் விதித்தவிதி யார்தான்வெல்வார்?

முடிசார்ந்த மன்னருடன் முனிவர்கூட
முடியாமல் வாழ்ந்தகதை இங்கேயில்லை!
பிடிசாம்ப ராகின்ற உடலைக்கட்டிப்
பிடித்திங்கு கதறுவதிற் பெருமையில்லை!
நடிகரப்பா நாங்களிந்த நானிலத்தில்
நல்லீசன் கழலிணைக்கே பாரம்வைமின்!
நடிப்பைமுடித் தவர்களங்கே முன்செல்லட்டும்
நம்கடமை முடியட்டும் நாமும்போவோம்!

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச்செய்தி

நான் கிளிநொச்சிச்சாலை முகாமையாளராக கடமை யாற்றிய காலத்தில் 1978-ம் ஆண்டு முதல் திரு. கா. சின்னையா பிள்ளை அவர்களுடன் நெருக்கமாகப் பழகியுள்ளேன்.

எவருடனும் எப்பிரச்சனையும் இல்லாமல் வாழ்ந்தவர். என்றாலும் அநீதியை எதிர்த்தெடுத்தவர். தனது எதிர்ப்பை பண்பாக எடுத்துரைப்பார். எச்சந்தர்ப்பத்திலும் வன்முறையில் இறங்கமாட்டார். என்மேல் கொண்ட பாசத்தினால் அல்லது நம்பிக்கைகாரணமாக வ. பி. போ. சபையில் உத்தியோகபூர்வ மாகத் தான் முகங்கொடுக்கும் பிரச்சனைகளுக்கு எனது ஆலோ சனையை நாடுவார். அதன்படி அணுகி வெற்றிப் பாதையில் சென்று இறுதியாக 17-02-1997 அன்று இச்சபையில் இருந்து இளைப்பாறினார். இளைப்பாறிய ஒரு வருடத்துள் உயிர் நீத் தார். இச்செய்தி யாரையும் கண்கலங்கச் செய்தது.

தனக்கு இட்டகடமையை சரியாகவும், கடமையுணர் வுடனும் நிறைவேற்றியவர். தனது உயர் அதிகாரிக்கு எப்பொழு தும் மதிப்புக் கொடுத்தவர். பழக மிகவும் இனியவர். சரியான தைச் சரியென்றும் பிழையானதைப் பிழையென்றும் சுட்டிக் காட்ட தயங்கமாட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகளுக்கு அவர் இழப்பைத்தாங்கும் சக்தியை எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க பிரார்த்தித்து, அவரது குடும்பம் சீரும் சிறப்பு டனும் வாழ மனமார வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

வட—பிராந்திய போக்குவரத்துச் சபை
கோண்டாவில்.

**எஸ். சொக்கலிங்கம்**
பொதுமுகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிதமான அன்பர்

உலகில் தூக்கமும் விழிப்பும் நடத்தல் போலவே இறப்பும் பிறப்பும் நடக்கின்றன. செல்வம் இளமை - உடம்புநிலையுடையன அல்ல, பிறந்திட்டால் இறந்திடத்தான் வேண்டும். இதனை எந்தச் சக்தியாலும் மாற்றிவிட முடியாது.

அதேபோலவே கடந்த 06-01-1998 அதிகாலை 4.00 மணியளவில் சுடர் போல எரிந்து கொண்டிருந்த திரு. சின்னையா பிள்ளை அவர்கள் ஆஸ்மா நோயில் இவ்வுலகை விட்டு அணைந்து விட்டார்.

இலங்கையின் மரண வயது எல்லை ஆண்களுக்கு 69, பெண்களுக்கு 72! ஆஸ்மா நோயுடையவராகிய அமரர் செ. ஐயாத்தம்பி (முத்தையா) அவர்கள் 85 வயதிற்கு மேல் வாழ்ந்துள்ளார்.

அமரர் திரு. சின்னையாபிள்ளை அவர்கள் ஆரம்பக்கல்வியை மீசாலை - விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்திலும் ஆங்கிலக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். கணிதமொழி அறிவில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையில் நன்கு தேர்ச்சிபெற்று விளங்கினார். மிகவும் துணிவுள்ளவர். வார்த்தைகளில் நளினமும் அதே நேரத்தில் இறுக்கமும் நேர்மையும் இருந்தது. அதனால் பகையில்லாத நகையான வாழ்வைக்கண்டார்.

காதலால் கட்டுண்டு - காலம் வரும்போது (தங்கமணி) அவரை மனைவியாகக் கடிமணம் செய்து முத்தான மூன்று புதல்வர்களைப் பெற்று அவர்களை நன்னிலைக்கு உயர்த்திச் செல்வமாக, மகிழ்வாக வாழ்ந்தார்.

இலங்கைப் போக்குவரத்து சாலையில் பேருந்து நடாத்துனராகச் சேர்ந்து மேற்பார்வையாளராக உயர்ந்து மேலதிகாரிகளின் அன்பையும் மதிப்பையும் பெற்றார்.

வலிகாமம் மக்கள் இடம்பெயர்ந்த பொழுது அவரது இல்லம் நிரம்பி வழிந்தது. செய்தியை 07-01-98 உதயனில் பார்த்தவர்கள் பதைபதைத்து ஓடோடி வந்தவர்கள் ஏராளம்!! அந்த அளவுக்கு உள்ளும் புறமும் இங்கிதமாக வாழ்ந்த ஏக அன்பன்! அவரது இழப்பு ஒரு பேரிழப்பாகும்.

சாந்தியில் அமைதி நிலவட்டும்!

அ.பொ. செல்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Shri Karthigesu Chinnaiahpillai
# As I Have Known Him

Tuesday, Jan. 6, 1998 — dawned quite unpleasently, shaking the life structure to the foundations, of his family, his kins, and many a gentle souls closely associated with my most trusted friend and unborn twin - Shri. Karthigesu Chinniahpillai, who passed away orphaning his bleoved little ones, to rest in peace with the almighty - God Shiva

I was blessed enough to enjoy the fruits of happiness and drink deep in the Elysion wells of trusted friendship and brotherhood, in associating with this gentleman from my very infancy, never parting until the day he left for Colombo to assume duties in the C. T B. followed by his marriage with his sweet heart 'THANGA' The news of his demise came to me with a heart - rending shock, shattering all hopes into a debris.

I now remember him as a playful child with his books under his shirt to school. Then as a boy fully absorbed in athletics taking part in both field and track events, coming with flying colours, which led him to the topmost position of taking part in the athletic meet conducted by the A.C.S. S. A, in Colombo

In his golden threshold of life he was sighing like furnace in longing for his hearts dove resulting in his marriage with 'THANKA' as he desired

As a son to his parents, he was indeed a very devoted son with much responsibility and concern towards them.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

As a husband, he was much attached to his better half and was always true to her, which was equally returned to him as he cherished.

As a father he was concerned very much in bringing up his children to fit in a society of the supreme order His high concepts resulted in admitting his eldest son at St. Johns College, Jaffna, and his second at the Jaffna Hindu College. He used to say 'Rasu' I am giving my children the best of education possible in Jaffna.

As a trusted friend of mine he was responsible for all my undertakings and ventures in personal, social, professional and political life It is not an exaggeration to say that he has earned a place of supreme importance in the hearts of my children by his timely advice in advancing their future set up.

I will be failing in my duty if I don't admit that his life partner 'THANGA' gave a hand in hand co-operation to him in all his ventures.

Mr. Chinniahpillai an athlete a social worker. a Champion, A king maker and above all a good hearted gentleman, who will live long in the hearts of his kins and friends

I now look up at the blue vault of heaven to pay my respect to his soul and pray the Almighty for his salvation.

May god bless us all a lion's heart to achieve peace of mind.

MEESALAI, P. V. RAJARATNAM
27-01-98. (Kuddy Vithanai)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப்பாக்கள்

## தேவாரம்

அருந்துணையை அடியார்தம் அல்லல்தீர்க்கும் அருமருந்
அகல் ஞாலத்தகத்துள் தோன்றி [தை
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும்விட்டு வான்புலன்கள்
அகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல்வரும் பயனைப்போகமாற்றிப் பொ
தனைநினையவல் லோர்க்கென்றும் [துநீக்கி
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

## திருவாசகம்

ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியனே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்றநெற்றிக்கண்
ணுடைய தோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செயம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
''பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவா நீயாடும்போதுன்
அடியின் கீழிருக்க'' என்றார்.

## திருப்புகழ்

கைலத்தல நிறைகனி அப்பமோடவல் பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ்மலர்கொடு பணிவேனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயர தகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

ஊரெலலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றைக்கும் மறவாத
# இனிய பல நன்றிகள்!

எங்கள் இதயங்கள்
இடிவிழுந்து பேதலிக்கப்
பொங்குந் துயரீந்து
போய்விட்ட தந்தையவர்
பிரிவால் நாம்துடித்துப்
பேதலித்த நேரமதில்
அருகிருந்து பணிசெய்தோர்
ஆறுதலை ஈந்தோர்கள்-
பெருமனத்தோ டரியபல
பேர்பணிகள் தந்தோர்கள்
கிரியை செய்த குருமார்கள்-
அஞ்சலிகள் ஈந்துநின்ற
போக்கு வரத்து சபை
அன்பர்கள்-
'லயன்ஸ்' கழகத்தார்-
உறுதுணையாய் நின்றுவந்த
'லியோ' கழக அன்பர்
இம்மலரை ஆக்கியோன், அச்சிட்டோர்-
மாதநிறைவுக் கிரியைகளை அணிசெய்வோர்
அனைவரையும் எங்கள்
அன்பினால் அகங்குழைந்து
என்றைக்கும் மறவாத-
இனியபல நன்றி சொன்னோம்.

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

இங்ஙனம்
குடும்பத்தவர்

திருக்கணிதம் — மட்டுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org